# பெருநகர சென்னை மாநகராட்சி

## செய்தி வெளியீடு

**தே.செ.வெ.எண். 37** **நாள்: 10.04.2024**

இந்திய தேர்தல் ஆணையத்தின் உத்தரவின் படி 18வது மக்களவைக்கான பொதுத்தேர்தல்கள், 2024-ஆனது தமிழ்நாட்டில் வருகின்ற 19.04.2024 அன்று ஒரே கட்டமாக நடைபெற உள்ளது. இதனையொட்டி சென்னை மாநகர காவல் துறையில் பணியாற்றுபவர்களில் தபால் வாக்கு கேட்டு விண்ணப்பித்த காவல் அதிகாரி மற்றும் ஆளிநர்கள்அனைவரும் 11.04.2024, 12.04.2024 மற்றும் 13.04.2024 ஆகிய தினங்களில் காலை 09.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை தபால் வாக்கு செலுத்த சென்னை மாவட்டத்திற்கு உட்பட்ட மூன்று தேர்தல் நடத்தும் அலுவலர்கள் அலுவலத்தில் சிறப்பு தபால் வாக்குசாவடி (Facilitation Centre) மையங்கள் அமைக்கப்பட்டு உள்ளது.

1. தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (வடக்கு), வட சென்னை மக்களவை தொகுதி எண்.62, பேசின் பிரட்ஜ் ரோடு, வண்ணாரபேட்டை, சென்னை-02 என்ற முகவரியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு தபால் வாக்குசாவடி (Facilitation Centre) மையத்தில் 002.வடசென்னை, 008 - வேலுாா, 009 - கிருஷ்ணகிரி, 010 - தர்மபுரி, 011 - திருவண்ணாமலை, 012 -ஆரணி, 013- விழுப்புரம், 014-கள்ளக்குறிச்சி, 015-சேலம், 016, நாமக்கல், 017- ஈரோடு, 018 - திருப்பூர் மற்றும் 025-பெரம்பலுார் ஆகிய பாராளுமன்ற தொகுதிகுட்பட்ட **காவல் அதிகாரி மற்றும் ஆளிநர்கள் ஆகியோர்** சென்று வாக்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (தெற்கு), தென் சென்னை மக்களவை தொகுதி எண்.115, முத்துலட்சுமி சாலை, அடையார், சென்னை -20 என்ற முகவரியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு தபால் வாக்குசாவடி (Facilitation Centre) மையத்தில் 003-தென் சென்னை, 028 - மயிலாடுதுறை, 029- நாகப்பட்டினம், 030 - தஞ்சாவூர் 031- சிவகங்கை, 032- மதுரை, 033-தேனி, 034-விருதுநகர், 035 - இராமநாதபுரம், 036- துாத்துக்குடி, 037-தென்காசி, 038-திருநெல்வேலி மற்றும் 039-

கன்னியாகுமரி ஆகிய பாராளுமன்ற தொகுதிகுட்பட்ட காவல் அதிகாரி மற்றும் ஆளிநர்கள் ஆகியோர் சென்று வாக்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

3. தேர்தல் நடத்தும் அலுவலர்/ வட்டார துணை ஆணையாளர் (மத்தியம்), மத்திய சென்னை மக்களவை தொகுதி எண்.36 பி, 2வது குறுக்கு தெரு, புல்லா அவென்யூ, செனாய் நகர், சென்னை -30 என்ற முகவரியில் அமைக்கப்பட்டுள்ள சிறப்பு தபால் வாக்குசாவடி (Facilitation Centre) மையத்தில 004- மத்திய சென்னை, 001- திருவள்ளூர், 005- ஸ்ரீபெரும்புதூர், 006 - காஞ்சிபுரம், 007- அரக்கோணம், 019- நீலகிரி, 020- கோவை, 021- பொள்ளாட்சி, 022- திண்டுக்கல், 023- கரூர், 024- திருச்சி, 026- கடலூர், 027-சிதம்பரம் மற்றும் புதுச்சேரி ஆகிய பாராளுமன்ற தொகுதிகுட்பட்ட **காவல் அதிகாரி மற்றும் ஆளிநர்கள்** ஆகியோர் சென்று வாக்கு செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

எனவே தபால் வாக்கு கேட்டு விண்ணப்பித்த அனைத்து காவல் துறை அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் மேற்கூறிய வாக்கு செலுத்தும் இடத்திற்கு தகுந்த ஆவணங்கள் மற்றும் காவலர் அடையாள அட்டையுடன் சென்று வாக்களிக்கும் படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**